# பத்திரிக்கை செய்தி

## கூட்டு நத்தம் பட்டா வழங்குவதற்கு லஞ்சம் பெற்ற விருதுநகர் மாவட்ட, கீழதிருத்தங்கல் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் கைது

புகார்தாரரின் தந்தை தனது பெயரில் உள்ள நிலத்திற்கு கூட்டு நத்தம் பட்டா வாங்குவதற்காக கீழத்திருத்தங்கல் கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை சிவகாசி தாசில்தாரிடம் அறிக்கையாக சமர்ப்பிப்பதற்கு திருமதி.உமாவதி, கிராம நிர்வாக அலுவலர், கீழத்திருத்தங்கல் கிராமம், விருதுநகர் மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியுள்ளார். பின்னர் அதனை ரூ.8,000/- மாக குறைத்து மீண்டும் ரூ.5,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் திரு.பிரித்விராஜ் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை விருதுநகர் பிரிவில் புகார் மனு ஒன்று அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 13.12.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருமதி.உமாவதி, கிராம நிர்வாக அலுவலர், கீழத்திருத்தங்கல் கிராமம், விருதுநகர் மாவட்டம் அவர்களின் உத்தரவின்பேரில் திரு.பொன்ராஜ், கிராம உதவியாளர் மூலமாக லஞ்ச பணமான ரூ.5,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.